16.04.2025 S.C.No.138 of 2017 P.W.51 – Govindhasamy

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 absent. And his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A2 to A6 present)

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.25 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: வேப்பங்குப்பம் காவல் நிலையம்தான் உங்களுக்குரிய காவல் நிலையம் என்றால் ?

ப: சரிதான்.

கே: அ.த.சா.ஆ.3 ல் ஷமீல் பாஷாவின் கைரேகை பதிவு செய்யப்பட்டதாக சொல்லியுள்ளீர்கள். ஆனால் அந்த ஆவணத்தில் உள்ள கைரேகை யாரினுடையது என்று பெயர் எழுதப்படவில்லை என்றால் ?

ப: சரிதான். LTF என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கே: LTF என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் அதில் LTF என்பது ஏதாவது நபரின் பெயரா என்றால் ?

ப: ஆம். அந்த கடிதத்தின் விடுநரின் பெயரை குறிக்கிறது.

கே: LTF–ன் விரிவாக்கம் என்ன என்றால் ?

ப: Left Thump Finger ஆகும்.

கே: மேலே சொன்ன பதிலின் படி அது எந்த நபரின் பெயரையும் குறிப்பிடவில்லை என்றால்?

ப: சரியல்ல. அது விடுநரின் பெயரை குறிப்பிட்டு அவரின் இடது கை பெருவிரல் ரேகையை குறிக்கின்றது.

கே: அ.த.சா.ஆ.3 ல் எந்த ஒரு நபரையும் குறிக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக புகார் கொடுத்த நபரின் கைரேகை என்று பொய் சொல்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: 26.06.2015 முதல் 01.07.2015 வரை நீங்கள்தான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்றால் ?

ப: ஆம். சரிதான். இவ்வழக்கின் இறப்பு குறித்து விசாரிக்க நீதிமன்ற நடுவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

கே: உங்களுக்கு கேள்வி சரியாக புரிந்தும். பதிலை மழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு தவறான பதில் அளிக்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: 26.06.2015 முதல் 01.07.2015 வரை நீங்கள் இந்த வழக்கு தொடர்பாக எந்த ஒரு விசாரணையும் செய்ய வேண்டாம் என்று உயர் அதிகாரிகளிடமிருந்தோ அல்லது நீதித்துறை நடுவரிடமிருந்தோ எழுத்துப்பூர்வமான உத்தரவு ஏதேனும் வந்ததா என்றால் ?

ப: இல்லை.

கே: அவ்வாறு எந்த உத்தரவும் இல்லாத நிலையில் நீங்கள் செய்த புலன்விசாரணையை வழக்கிற்காக மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: 01.07.2015 அன்று நீங்கள் புலன் விசாரணை செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களை காட்டுங்கள் ?

ப: 01.07.2015 அன்று புலன் விசாரணை வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேலும்

வழக்கு தொடர்பான ஆவணங்களை கனம் காவல் கண்காணிப்பாளர் 30.06.2015 அன்று அளித்த உத்தரவுப்படி வழக்குக்கோப்பு ஆவணங்களை சிபிசிஐடி அதிகாரிகளிடம் ஒப்படைத்தேன்.

கே: 01.07.2015 அன்று எந்த சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் நான் பதியவில்லை என்றால்?

ப: இல்லை.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு முகவரியிட்டு இந்த வழக்கு தொடர்பாக எந்த ஒரு புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் ?

ப: சரிதான். இவ்வழக்கின் வாதி அலி அக்பர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின்படி பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

கே: அ.த.சா.ஆ.79 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தது நான்தான் என்றால் ?

ப: சரிதான்.

கே: அந்த ஆவணத்தில் Sl.No.16 ல் தகவல் கொடுப்பவரின் கையொப்பம் அல்லது கைரேகை வாங்க வேண்டும் என்று உள்ளது அதை நான் வாங்கினேனா என்றால் ?

ப: சரிதான். அன்று இரவு பதட்டமாக இருந்த காரணத்தால் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் வரை காத்திருக்கவில்லை. அன்று இரவே முதல் தகவல் அறிக்கை 176 கு.வி.மு.சவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டதால் அதை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டது.

கே: முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கும் முன்பு அதை முழுமையாக நிரப்பி தான் அனுப்பி வேண்டும் அதில் வெற்றிடம் இருந்தால் அதை Stick out செய்து அனுப்ப வேண்டும் என்றால் ?

ப: சரிதான். அன்று பதட்டமான சூழ்நிலை இருந்ததால் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கே: அ.த.சா.ஆ.79 ல் எழுதியதை அடித்து எழுதியுள்ளது அதற்கான Endorsement செய்யப்படவில்லை என்றால் ?

ப: சரிதான். அன்றைய சூழ்நிலையில் பதட்டமாக இருந்ததால் குறியீடு செய்யமுடியவில்லை.

கே: அதே ஆவணத்தில் சில இடங்களில் இடைசெருகலாக வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளது. அதற்கான Endorsement–ம் செய்யப்படவில்லை என்றால் ?

ப: சரிதான். அன்றைய சூழ்நிலையில் பதட்டமாக இருந்ததால் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் என்பதால் குறியீடு செய்யபடவில்லை.

கே: சிபிசிஐடியிடம் நீங்கள் கொடுத்த வாக்குமூலத்தில் நான் பதட்டமாக இருந்ததால் FIR–ல் அடித்தல் திருத்தலாக சொற்கள் எழுதி இடைச்செருகள் மற்றும் பல இடங்களில் நிரப்பப்படாமலும் உள்ளதை பற்றி வாக்குமூலம் அளித்தீர்களா?

ப: நான் சிபிசிஐடியும் வாக்குமூலம் அளித்தபோது அவர்கள் என்னிடம் இது குறித்து கேட்கவில்லை.

கே: ஆம்பூரில்தான் கலவரம் நடந்தது என்றும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நான் சொல்வது போல் பதட்டமான

சூழ்நிலை எதுவும் இல்லை என்றும் தாங்கள் செய்த தவறை மறைக்க அங்கு பதட்டமான சூழ்நிலைய இருந்தது என்று பொய் சொல்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: தாங்கள் மூன்று புகாரை பெற்றதாக சொல்லியுள்ளீர்கள் ?

ப: இல்லை. நான் முதலில் பெற்ற புகார் மனு மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மற்ற இரண்டு மனுக்கள் ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்டது.

கே: மேலே சொன்னதுபோல் ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்ட இரண்டு புகார்கள் மீது அந்த காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று எழுத்து மூலமாக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளீர்களா ?

ப: இல்லை. என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனு மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ஆம்பூர் நகர ஆய்வாளர் என்று குறிப்பிட்ட மற்ற இரண்டு மனுக்களையும் பின்பு பெறப்பட்டதால் புகார் மனுக்களின் சங்கதி ஒரே சம்பவம் பற்றி இருப்பதால் அவற்றை வாக்குமூலமாக 01.07.2015 அன்று மற்ற இரண்டு மனுக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

கே: இது குறித்து 01.07.2015 வரை யாரையாவது விசாரணை செய்து அறிக்கை பெற்றேனா என்றால் ?

ப: இல்லை. மற்ற இரண்டு மனுக்களும் ஒரே சங்கதியை குறிப்பிட்டிருந்ததாலும் ஏற்கனவே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்ததாலும் அறிக்கை பெறவில்லை.

கே: பெறப்பட்ட மனுக்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று விசாரணை செய்யாமல் அந்த மனுக்கள் மீது மேல்

நடவடிக்கை இல்லை என பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: 27.06.2015 அன்று சாட்சிகளை விசாரித்ததாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்கள். அந்த சாட்சிகளின் வாக்குமூலங்களை கையால் எழுதி வாங்கினேன் என்றால் ?

ப: சரியல்ல. தட்டச்சு செய்யப்பட்டது.

கே: எந்த இடத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் ?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது.

கே: தட்டச்சு செய்யப்பட்டதாக சொல்வது ஆய்வாளர் தனி லேப்டாப்பிலா அல்லது காவல் நிலையத்தின் கணினியிலா என்றால் ?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் அப்போது இருந்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

கே: தட்டச்சு செய்யப்பட்டு வாங்கப்பட்ட வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது 65B படி தாக்கல் செய்தோமா என்றால்?

ப: 65B படி தாக்கல் செய்யப்படவில்லை. அது வழக்கிற்கு தேவைப்படாததால் அதன்படி தாக்கல் செய்யவில்லை.

கே: தட்டச்சு சாட்சிகள் நேரடியாக சொல்ல சொல்ல செய்யப்பட்டதா அல்லது சுருக்கமாக எழுதிக்கொண்டு பின்பு செய்யப்பட்டதா என்றால்?

ப: சாட்சிகள் நேரடியாக விசாரித்தபோது சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது.

கே: என்னுடைய கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் "அலி அக்பரிடம் விசாரிக்கும்போது புகார் சம்பந்தமாக Woman missing என்ற வழக்கு பதிவு செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ரவி என்பவர் 16.06.2015 ம் தேதி ஷமீல் பாஷா என்பவரை விசாரிக்க வேண்டும் என்று கூறி வரவழைத்து விசாரணை செய்து அனுப்பியுள்ளார்" என்று உள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: அனுமந்தன் என்பவரின் வாக்குமூலத்தில் நான் விசாரிக்கின்ற போது காவல் ஆய்வாளர் விசாரணை செய்து பிறகு 16.06.2015 தேதியும், 19.06.2015 ம் தேதியும் திரு.ரவி சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவர் கைப்பட எழுதி அனுப்பி வைத்தார் என்று சொல்லியிருப்பது சரிதான் என்றால் ?

ப: சரிதான். நான் விசாரித்தபோது சாட்சி கூறியதை நான் பதிவு செய்தேன்.

கே: சாட்சி கூறியதை தாங்கள் பதிவு செய்தீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: இவ்வழக்கில் ஷமீல் பாஷாவை முதலில் விசாரித்து எஸ்எஸஐ ரவியிடம் வாக்குமூலம் தாங்கள் பெற்றீர்களா ?

ப: இல்லை. அவர் நான் இந்த வழக்கை விசாரித்தபோது அயல் பணிக்காக வெளியில் சென்றிருந்தார்.

கே: எஸ்எஸஐ ரவி அயல் பணியில் இருந்ததற்கான ஆவணம் எதையாவது தாக்கல் செய்துள்ளீர்களா ?

ப: இல்லை.

கே: எஸ்எஸஐ ரவியை விசாரித்திருந்தால் வழக்கின் உண்மைத்தன்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்றால் ?

ப: சரியல்ல.

கே: புகார் எந்த காவல் நிலையத்தில் கொடுக்கிறார்களோ அந்த காவல் நிலையத்தில் வழக்கின் Jurisdiction இல்லை என்றாலும் புகாரை பெற்று Zero FIR பதிய வேண்டும் என்பது விதி என்றால் ?

ப: சரிதான். அதனால்தான் என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவினை முதல் தகவல் அறிக்கை பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 பிரிவு 176 கு.வி.மு.ச.ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

கே: தங்களுடைய முதல் விசாரணையில் நான் 09.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்தபோது அலி அக்பர் புகார் கொடுக்க வந்தார் என்று நான் சொல்லியுள்ளேன். Zero FIR பதிவு செய்து அதை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு மாற்றம் செய்தேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு முகவரியிட்டு தரப்பட்ட புகார்களுக்கு அந்த காவல் நிலையத்தில்தான் Zero FIR போட்டிருக்க வேண்டும் என்றும் அந்த புகார்களுக்கு FIR பதிய தங்களுக்கு உரிமை இல்லை என்றால் ?

ப: சரியல்ல.

கே: அ.த.சா.ஆ.18 மாதிரி வரைபடத்தில் உள்ள சங்கதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் ?

ப: சரியல்ல. புகார் மனுவில் சம்பவ இடம் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் என்று குறிப்பிட்டுள்ளதால் மாதிரி வரைபடம் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் குறிப்பிடப்பட்டது.

கே: தாங்கள் சிபிசிஐடியிடம் ஆவணங்கள் கொடுத்ததாக கூறியிருக்கிறீர்கள் அதனை இந்த நீதிமன்றத்தில் காட்டுங்கள் ?

ப: சிபிசிஐடியிடம் ஒப்படைத்தேன். அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

கே: சிபசிஐடியிடம் ஒப்படைத்ததற்கான ஒப்புகைச்சீட்டையாவது காட்டுங்கள் ?

ப: சிபிசிஐடியிம் வாங்கிய ஒப்புகை கடிதத்தை நீதிமன்றத்திற்கு நான் அனுப்பவில்லை. சிபிசிஐடியிடம் ஒப்படைத்ததால் நான் தனியாக நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை.

கே: சிபிசிஐடியிடம் என்னென்ன ஆவணங்களை தாங்கள் சமர்ப்பித்தீர்கள் ?

ப: வழக்குக்கோப்பில் இருந்ததை நான் அனுப்பி வைத்தேன்.

கே: என்னென்ன ஆவணங்கள் என்று உங்களின் CD File ஐ பார்த்து சொல்லுங்கள்?

ப: 1. AR copy

2. Death Report Xerox copy ஆகியவை ஆகும்.

கே: மேற்சொன்ன AR copy, Death Report Xerox copy தவிற வேறு எதையும் அனுப்பவில்லையா?

ப: வழக்குக்கோப்பில் இருந்ததை அனுப்பிவைத்தேன்.

கே: வழக்குக்கோப்பில் என்னென்ன ஆவணங்கள் இருந்தன என்று ஒவ்வொன்றாக வரிசைப்படுத்தி கூறவும் ?

ப: அன்றைய தினம் வழக்குக்கோப்பில் என்ன ஆவணங்கள் இருந்தது என்பதை சிபிசிஐடி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். அவற்றை ஒவ்வொன்றாக உட்பிரிவு என்ன என்பது பற்றி என்னால் சொல்ல முடியாது. ஞாபகமில்லை.

கே: தற்போது தங்களிடம் உள்ள CD File ஐ பார்த்து சிபிசிஐடியிடம் எவையெல்லாம் கொடுத்தீர்கள் என்று வரிசைப்படுத்தி சொல்லுங்கள் ?

ப: 1.முதல் தகவல் அறிக்கை நகல்

2. அலி அக்பர் புகார் மனு நகல்

3. நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் நகல்

4. Cheif Judicial Magistrate, Vellore அவர்களின் கடிதத்தின் நகல்

5. வழக்கு நாட்குறிப்பின் நகல்

6. பார்வை மகசர் நகல்

7. மாதிரி வரைபடம் நகல்

8. Death Report நகல்

9. குற்ற எண் 158/2015 வழக்கின் சாட்சிகளின் நகல்

10. குற்ற எண் 158/2015 வழக்கின் வரலாறு நகல்

11. வழக்கு நாட்குறிப்பின் நகல்

12. ஆம்பூர் அரசு மருத்துவமனை காயச்சான்று நகல்.

13. சென்னை அரசு மருத்துவமனை பிரேத பரிசோதனை செய்த மருத்துவ குறிப்பு நகல்.

14. பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 PM Hospital நகல்.

15. தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட உடல் உறுப்புகளின் விவரம் நகல்.

16. ஆம்பூர் அரசு மருத்துவமனை ஷமீல் பாஷா சிகிச்சை பெற்ற நகல்.

17. வேலூர் அரசு மருத்துவமனையில் ஷமில் பாஷா சிகிச்சை பெற்ற நகல்.

18. ஆம்பூர் மருத்துவமனை உள்நோயாளி அனுமதி சீட்டு நகல்.

19. ஷமீல் பாஷாவின் பிரேதத்தை குடும்பத்தாரிடம் ஒப்படைத்த நகல்.

20. ஷமீல் பாஷா மருத்துவமனையில் சேர்ந்தது குறித்து ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்த நகல்.

21. நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பிரேதத்தின் மீது எடுத்த ஆடையை இரசாயனகூடத்திற்கு அனுப்பிய நகல்.

22. பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 விசாரித்த சாட்சிகளின் நகல்.

23. இறந்த ஷமீல் பாஷா பிரேதத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்த புகார் மனுவின் நகல்.

24. ஷமீல் பாஷா Death Report உண்மை நகல்.

25. ஷமீல் பாஷா 19.06.2015 ம் தேதி Bind Over செய்த நகல்.

26. ஷமீல் பாஷா 16.06.2015 ம் தேதி Statement நகல்.

27. பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015, பிரிவு 176 கு.வி.மு.ச. ஆவணங்களின் பட்டியல்.

கே: மேற்கண்ட ஆவணங்கள் எந்த தேதியில் சிபிசிஐடியிடம் கொடுத்தீர்கள் ?

ப: 01.07.2015 ம் தேதி.

கே: அ.த.சா.ஆ.82 ல் காணப்படும் 17 ஆவணங்களை எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளீர்கள் ?

ப: 01.07.2015

கே: மேற்கண்ட ஆவணங்களை ஏன் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை ?

ப: 01.07.2015 ம் தேதி காலை 09.00 மணிக்கு வழக்குக்கோப்பில் இருந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு அனுப்பி வைத்தேன். பின்னிட்டு ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்டதாக காவல் நிலைய எழுத்தர் வழக்கோப்பில் இருந்ததை அதன் பிறகு சிபிசிஐடி அலுவலர் கேட்கும்போது நான் ஒப்படைத்தேன்.

கே: மேலே குறிப்பிட்டுள்ள 27 ஆவணங்களும் ஆம்பூர் காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்டதா?

ப: இல்லை.

கே: மேற்கண்ட 27 ஆவணங்களில் எவை எவை ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்டன ?

ப: ஆம்பூர் காவல் நிலைய Intimation, AR copy நகல் நிலைய எழுத்தர் பெற்ற வைத்திருந்ததை அனுப்பி வைத்தேன்.

கே: மேற்கண்ட இரண்டை தவிற மீதி இருக்கிற 25 ஆவணங்களும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில்தான் இருந்தது என்றால் ?

ப: வழக்குக்கோப்பில் இருந்ததை அனுப்பி வைத்தேன். என்னென்ன ஆவணங்கள் என்று ஞாபகமில்லை.

கே: மேற்கண்ட 25 ஆவணங்களையும் வழக்குக்கோப்பில் இருந்ததாக ஒப்புக்கொள்ளும் நீங்கள் அதை ஏன் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை ?

ப: இவ்வழக்கு சம்பந்தமான ஆவணங்களை 01.07.2015 ம் தேதி காலை 09.00 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த பிறகு நிலைய எழுத்தர் இவ்வழக்கு சம்பந்தமாக இருந்த நகல்களை சிபிசிஐடி காவல் துணைக்கண்காணிப்பாளர் கேட்கும்போது ஒப்படைத்தேன். அவை என்ன ஆவணங்கள் என்று தற்போது நினைவில்லை.

கே: 01.07.2015 காலையே பள்ளிக்கொண்டா காவல் நிலைய கோப்புகளில் ஆவணங்கள் இருந்ததாக ஒப்புக்கொள்ளும் நீங்கள் அவைகளை ஏன் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை ?

ப: 01.07.2015 ம் தேதி காலை 09.00 மணிக்கு இருந்த ஆவணத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

கே: 01.07.2015 அன்று காலை 09.00 மணிக்கு பிறகு நிலைய எழுத்தரால் தங்களிடம் காண்பிக்கப்பட்ட ஆவணங்களான மேற்கண்ட 25 ஆவணங்களையும் ஏன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை ?

ப: இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை சிபிசிஐடியிடம் ஒப்படைத்தபோது நிலைய எழுத்தர் இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குக்கோப்பில் கோர்வை செய்யப்படாத இருந்த ஆவணங்களை பின்னிட்டு பள்ளிக்கொண்டா காவல் நிலைய எழுத்தர் தபால் மூலம் பெறப்பட்ட நிலையில் அதன் பின்னர் சிபிசிஐடியிடம் இருந்த ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டன.

கே: 01.07.2015 அன்றே நிலைய எழுத்தரால் கோர்வு செய்யப்படாமல் இருந்ததை தெரிந்துக்கொண்ட நீங்கள் அதை பெற்று சிபிசிஐடிக்கு கொடுப்பதற்கு முன்பாக ஏன் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை?

ப: 01.07.2015 ம் தேதி அன்றைய சூழ்நிலையில் பதட்டமான சூழ்நிலை இருந்ததாலும் சிபிசிஐடி அலுவலர் வழக்கு சம்பந்தமான ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும் என்பதால் ஒப்படைத்தேன்.

கே: தங்கள் சிபிசிஐடியிடம் கொடுத்த கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் 01.07.2015 அன்று காலை 09.00 மணிக்கு பிறகு நிலையத்தில் இருந்த நிலைய எழுத்தரால் கோர்வு செய்யப்படாத ஆவணங்களை பார்த்தேன் என்று உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: நிலைய எழுத்தரால் கோர்வு செய்யப்படாத ஆவணங்களின் தகவல்கள் தங்களது கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் உள்ளதா?

ப: இல்லை.

கே: 01.07.2015 காலை 09.00 மணிக்கு பிறக தபால் மூலம் ஆம்பூர் நகர காவல் நலையத்திலிருந்து 25 ஆவணங்கள் நிலைய எழுத்தர் பெற்றார் என்ற தகவல் அதில் உள்ளதா ?

ப: இல்லை. ஒன்று அல்லது இரண்டு ஆவணங்களின் நகல்கள் மட்டும்தான் ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்டது.

கே: 01.07.2015 காலை 09.00 மணிக்கு பிறகு ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து யார் மேற்கண்ட 25 ஆவணங்களை கொண்டு வந்தார்கள் என்ற தகவல் பொதுநாட்குறிப்பில் உள்ளதா?

ப: இல்லை. வழக்கமாக பொதுநாட்குறிப்பில் அதைப்பற்றி குறிப்பிடபடுவதில்லை.

கே: அப்படியானால் எந்த ஆவணத்தில் பதிவு செய்வீர்கள் ?

ப: தபால் வருவதை பதிவு செய்வோம். சில தகவல்களை பதிவு செய்யமாட்டோம்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு ஆம்பூர் நகர காவல் நிலையத்தலிருந்து யார் மேற்கண்ட 25 ஆவணங்களையும் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்பதை எந்த ஆவணத்தில் பதிவு செய்து வைத்துள்ளீர்கள் ?

ப: 25 ஆவணங்கள் ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து வந்தது என்று நான் குறிப்பிடவில்லை. ஒன்றிரண்டு ஆவணங்கள் வந்தது. அதை தபால் பதிவு எதுவும் செய்யவில்லை.

கே: அந்த சமயத்தில் யார் எழுத்தர் அல்லது ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாக சொல்லும் ஆவணங்களை யார் வாங்கி பதிவு செய்திருக்க வேண்டும் ?

ப: அப்போது பள்ளிக்கொண்டா காவல் நிலைய எழுத்தர் திரு.முத்துக்குமரன் மற்றும் காவலர் தேவயாணி ஆகியோர்கள் இருந்தார்கள். நான் மூன்று நாட்கள் தான் பொறுப்பு அதிகாரியாக இருந்தேன். அதனால் அவர்களின் காவலர் எண் நினைவில்லை.

கே: 01.07.2015 ம் தேதி டியூட்டி ரோஸ்டரை பார்த்து மேற்கண்ட முத்துக்குமரனுக்கும் தேவயாணிக்கும் என்ன பணி என்று சொல்லுங்கள்?

ப: இரண்டு காவலர்கள் இருந்தார்கள்.

கே: முத்துக்குமரன் மற்றும் தேவயாணிக்கு என்ன பணி என்று சொல்லுங்கள் ?

ப: முத்துக்குமரன் என்பவர் நிலைய எழுத்தர், தேவயாணி என்பவர் சர்க்கில் இன்ஸ்பெக்டரின் கீழ் உள்ள வட்ட எழுத்தர்.

கே: தேவயாணியின் பெயர் டியூட்டி ரோஸ்டரில் உள்ளதா என்று பார்த்து சொல்லுங்கள் ?

ப: தேவயாணி என்கிற பெண்காவலர் பணி குறித்து பட்டியல் ஆவண் எண். 37 மற்றும் 38 ல் பதிவுகள் ஏதும் இல்லை.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்டதாக தாங்கள் குறிப்பிடும் 25 ஆவணங்களின் நகல்கள் தங்களிடம் உள்ளதா ?

ப: 25 ஆவணங்கள் ஆம்பூரிலிருந்து பெறப்பட்டவைகள் இல்லை. பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் வழக்குக்கோப்பில் இருந்த ஒன்றிரண்டு ஆவணங்கள் AR copy, புகார் மனு இருந்தது. அவைகளின் நகல்கள் என்னிடம் இல்லை.

கே: ஷமீல் பாஷா மருத்துவமனையில் சேர்ந்தது குறித்து ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்த நகலை யார் பெற்றது?

ப: அப்போது இருந்த நிலைய எழுத்தர் பெற்றிருக்கலாம்.

கே: உங்களுடைய முதல் புலன் விசாரணையில் எழுத்தர் முத்துக்குமரனிடம் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்தீர்களா ?

ப: இல்லை.

கே: பெண் காவலர் தேவயாணி அவர்களிடம் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்தீர்களா ?

ப: இல்லை.

கே: ஆம்பூர் காவல் நிலைய எழுத்தர் ஆம்பூர் மருத்துவமனையிலிருந்து ஷமீல் பாஷாவின் மருத்துவமனை சிகிச்சை குறித்த ஆவணங்களை பெற்றிருக்கலாம் என்று கூறும் நீங்கள் ஆம்பூர் நகர காவல் நிலைய எழுத்தரிடம் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை. அப்போது ஆம்பூர் கலவரம் பாதுகாப்பு பணி என்பதால் பதிவு செய்யவில்லை.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையின் ஷமீல் பாஷாவை சிகிச்சை குறித்த ஆவணங்களை பெற்ற நீங்கள் அதனை நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் மறைத்து சிபிசிஐடியிடம் கொடுத்ததாக இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அ.த.சா.ஆ.80 ஐ தாங்கள்தான் தயாரித்தீர்களா ?

ப: ஆம்.

கே: அ.த.சா.ஆ.80 ல் உள்ள எழுத்துக்கள் எல்லாம் தங்களுடையது தானா ?

ப: ஆம்.

கே: அ.த.சா.ஆ.80 ல் X Mark செய்து SOC என்று அதனை வட்டமிட்டு காட்டியது தாங்கள்தான் என்றால் ?

ப: ஆம்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.51 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.16 17:26:00 +0530